**தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2016**

---

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவினங்கள் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 5 ஆம் பிரிவு மற்றும் 61 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஆக்கப்பட்ட 1994 இன் 01 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் கட்டளைத் தொகுதியின் 12 ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின், தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் (இ.பொ.து.க.நி)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 45 ஆம் பிரிவின் பிரகாரம், நிதிக்கூற்றுகளில் பொருண்மையான விடயங்களை வேறாக காட்டப்பட வேண்டுமெனினும் மொத்தப் பொறுப்புக்களில் 72 சதவீதத்தினை பிரதிநிதிப்படுத்தும் ரூபா 1,457,772 இற்கான செலுத்த வேண்டிய திரைப்பட உற்பத்திக் கடன், ஐந்தொகையில் வேறாகக் காட்டப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 24,791,754 தொகை பெறுமதியான 03 மாதங்கள் அல்லது அதனை விடக் குறைவான திறைசேரி உண்டியல்களில் முதலீடுகள், காசுப்பாய்ச்சல் கூற்றில் காசும் காசுக்குச் சமமானவைகளின் கீழ் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(இ) இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தில் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணத்தினால் ரூபா 1,972,950 தொகை கிரயத்தையுடைய மோட்டார் வாகனத்திற்கு பெறுமானத் தேய்வு கழித்திருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீட்டுத் தவறினை இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், இம் மோட்டார் வாகனத்தின் காப்புறுதி உறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதைய சந்தை பெறுமதி ரூபா 1,600,000 தொகை என இனங்காணப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதியத்தினால் பேணப்படும் இலங்கை வங்கி டொரிங்டன் கிளையின் நடைமுறைக் கணக்கில் 2016 ஆகஸ்ட் முதல் ரூபா 60,000 இற்கான இனங்காணப்படாத செலவு மீதியொன்று காணப்பட்ட போதிலும் அம் மீதியினை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

---

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1999 ஜூன் 17 ஆம் திகதி நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் வெளியிட்டுள்ள தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் அது தொடர்பான வழிகாட்டல் கோவையின் 6.5 ஆம் பிரிவு | முதலீட்டுச் சபை பிரமாணங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சினிமாக் கட்டிடத் தொகுதிகளில் காட்சிப்படுத்தப்படும் ஒவ்வொரு இறக்குமதி செய்யப்படும் திரைப்படங்களின் நுழைவுச் சீட்டு ஒன்றில் ரூபா 2.25 தொகை அல்லது மொத்த நுழைவுச் சீட்டு வருமானத்தில் 2.25 சதவீதம் தொகை அல்லது அவ் இரண்டிலும் கூடிய தொகை, தேசிய திரைப்படக் கூட்டுத்தானத்தில் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு கிடைக்க வேண்டுமெனினும் மருதானையில் அமைந்துள்ள 2001 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சினேசிட்டி (Cine city) சினிமா கட்டிடத்தொகுதியில் இருந்து அவ்வாறு அறவிடப்பட வேண்டிய தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1996 அக்தோபர் மாதம் 24 ஆம் திகதிய 946/09 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட 1996 இன் 01 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபன (பலவினக் கட்டணங்கள்) கட்டளை இலக்க 4 ஆம் பிரிவு | திரைப்பட மாளிகை ஒன்றினால் இறக்குமதி செய்யப்படும் திரைப்படமொன்று காட்சிப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அறவிடப்படும் கட்டணங்களுக்கு (Leavy) தவிர ‘‘யூ’’ இன் திரைப்படம் ஒன்றிற்காக நுழைவுச் சீட்டு ஒன்றில் இருந்து ஒரு ரூபாவும் ‘‘எக்ஸ்’’ இன மற்றும் ‘‘வயதுவந்தவர்களுக்கு மிகவும் பொருத்தமானது’’ ஆகிய இனங்களைச் சேர்ந்த நுழைவுச்சீட்டு ஒன்றில் இருந்து மூன்று ரூபா வீதமும் அறவிடப்பட வேண்டும். அவ்வாறு அறவீடு செய்யப்படும் மொத்தத் தொகையும் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக திரைப்பட மாளிகையின் உரிமையாளர் அல்லது குத்தகைக்கு எடுத்தவரினால் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பப்பட வேண்டுமெனினும் அப்பணத்தை அறவீடு செய்வதற்காக பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 1996 அக்தோபர் 24 ஆம் திகதிய 946/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் திருத்தப்பட்ட 1994 இன் 01 இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் கட்டளை இலக்கம் 6(இ) பிரிவு | கடன்தொகையை திருப்பி செலுத்துவதில் தாமதம் ஏற்படின் அதற்காக அறவிடப்பட வேண்டிய மிகைவிதிப்புக்கள் நிருவாக சபையினால் தீர்மானிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டு வரை திரைப்பட மாளிகை உரிமையாளர்களுக்கு வழங்கியிருந்த ரூபா 73,716,422 இற்கான கடன் தொகை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு | தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் பணத்தை முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனினும் அவ்வாறான அனுமதியொன்று இன்றி ரூபா 47,709,984 தொகை திறைசேரி உண்டியல்களில் மற்றும் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 7,433,093 இற்கான மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 384,475 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 7,048,618 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது ஏனைய வருமானங்கள் உட்பட வருமானங்கள் ரூபா 1,865,528 இனால் அதிகரித்தல் மற்றும் திரைப்பட விழாக்களுக்காக கடந்த ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,000,000 இற்கான செலவு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்படாமையால் மேற்கூறிய நிதி விளைவுகளில் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதி அளவில் 05 வருடங்களுக்கும் 13 இற்கும் இடைப்பட்ட காலவீச்சு முதல் காணப்படும் ரூபா 67,001,194 இற்கான கடன்பட்டோர்கள் மீதி அறவிட முடியாத கடன் என இனங்கண்டிருந்த போதிலும் இந்த கடன்தொகையை அறவீடு செய்வதற்காக ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் முக்கிய வருமான வழியான திரைப்பட வாடகைப் பங்களிப்பு தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் பல வருட காலமாக இந்த பணத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2016 திசெம்பர் 31 திகதி அளவில் பெறவேண்டிய தொகை ரூபா 20,165,991 ஆக இருந்தது.

(இ) 2001 மற்றும் 2002 ஆண்டுகளின் போது பில்ம் லங்கா எனப்படும் மருதானை சினேசிட்டி சினிமா கட்டிடத் தொகுதியின் நிர்மாண வேலைகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 8.5 மில்லியன் இற்கான கடன்தொகை, உடன்படிக்கையின் பிரகாரம் அறவீடு செய்வதற்காக இயலாதிருந்ததுடன் அதன் படி 2016 திசெம்பர் 31 திகதி அளவில் மேலும் ரூபா 2,874,018 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மேலும் கடன் அறவீடு செய்யும் போது உடன்படிக்கையின் பிரகாரம் வட்டித் தொகையினை அறவீடு செய்தல் மற்றும் வட்டியின் பெறுமதியினை கணித்து கணக்கீடு செய்தல் நடைபெற்றிக்காததுடன் 2006 ஆண்டு வரை பெறவேண்டிய வட்டிப் பெறுமதி ரூபா 4,064,958 தொகை மற்றும் அதன் பின்னர் பெற வேண்டிய வட்டித் தொகையினை இனங்காணலும் நடைபெற்றிருக்கவில்லை.

(ஈ) மேற்கூறிய கடன் உடன்படிக்கையின் பிரகாரம் சினேசிட்டி சினிமா கட்டிடத் தொகுதியில் திரைப்படம் காட்சிப்படுத்தும் போது தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தில் இருந்து கொடுத்திருந்த கடனை அறவீடு செய்யும் வரை சுமார் 15 வருட காலம் கூட்டுத்தானத்தினால் வழங்கும் திரைப்படங்களை காட்சிப்படுத்துவதில் முக்கியம் வழங்கி செயற்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் நிதியத்தின் முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக போதியளவு கவனம் ஒன்று செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டுத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1996 அக்தோபர் 24 திகதி 946/9 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியினால் திருத்தப்பட்ட 1994 இன் 01 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய கட்டளை இலக்கம் 05 பிரிவு 01 இன் பிரகாரம் நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகத்திற்கான விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் பெயரிடப்படும் இரண்டு பிரதிநிதிகள் அடங்கிய நிருவாக சபையொன்று நியமிக்கப்பட வேண்டுமெனினும் 2012 ஆண்டின் பின்னர் நிருவாக சபை நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திறைசேரி உண்டியல்களில் மற்றும் மீள்கொள்வனவு செய்தல் திறைசேரி உண்டியல் வைப்புக்களில் (Repo) முதலீடுகள் முறையே ரூபா 36,068,853 தொகை மற்றும் ரூபா 9,641,131 தொகையாகக் காணப்பட்டது. இந்த முதலீடுகள் மேற்கொள்ளும் போது தேசிய சேமிப்பு வங்கியில் தொடர்ந்தும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதற்காக திறைசேரி உண்டியல் விற்பனை விவகாரங்களுக்கான ஆரம்ப வியாபாரிகளிடம் கூறுவிலைகள் கோரப்பட்டு மிகவும் அனுகூலமாக வட்டி வீதத்தின் மீது முதலீடு செய்வதற்கு இயலுமாக இருந்த போதிலும் மத்திய வங்கியால் வெளியிடப்படும் திறைசேரி உண்டியல் ஏலவிற்பனையின் அட்டவணையின் பிரகாரம் திறைசேரி உண்டியல்களில் சார்புநிலை வட்டி விகிதாசாரத்தை விட சுமார் 0.4 சதவீதம் குறைவான வட்டி ஒன்றிற்கு முதலீடு செய்யப்பட்டிருந்தது.

## 4.3 நிதியங்களின் குறை பயன்பாடு

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் வங்கி நடைமுறைக் கணக்குகளில் ரூபா 10,844,516 இற்கான மீதியொன்று காணப்பட்டதுடன் 2016 ஆண்டில் ஒவ்வொரு நாளும் ரூபா 4,800,000 தொகையை விட மிகையான தொகையொன்று காணப்பட்டமையால் அப் பணத்தினை குறுகிய கால முதலீடு ஒன்றில் ஈடுபடுத்தி ஏதேனும் வருமானம் ஒன்றினை உழைப்பதற்கு இயலுமாக இருந்த போதிலும் இது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

# 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் குறிப்பிட்ட நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் 51 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2017 ஏப்ரல் 21 திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் 133 மற்றும் 134 ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வருமான நிருவாகம் | திரைப்பட வாடகை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான நடைமுறை யொன்று தயாரித்திருக்காமை. |
| (ஆ) | கடன் கட்டுப்பாடு | கடன் வழங்குதல் மற்றும் அறவீடு செய்தலுக்கான விதிக் கோவையை இற்றைவரைப்படுத்தாமை மற்றும் நிலுவைக் கடன்கள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |